சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பயனடையும் அரசு/ அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பொருட்களுக்கான உணவூட்டுச் செலவினத்தை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2)துறை

அரசாணை (3ப) எண். 17

நாள் 23.11.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது கார்த்திகை 7

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண் 1222, பொது (மு.அ.ச.உ.தி)துறை, நாள் 26.07.1984.
2. அரசாணை (நிலை) எண் 49, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை நாள் 17.4.2013.
3. அரசாணை (3ப) எண் 22, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந. 4–1) துறை, நாள் 04.11.2019.
4. மத்திய அரசு, கல்வி அமைச்சகம், பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை (PM–POSHAN) பிரிவு கடிதம் F.No.1–3/2021–DESK(MDM) Part (2) நாள் 07.10.2022
5. சமூக நல ஆணையரின் கடிதம் 34957/சஉதி.2(1)/2018 நாள் 19.10.2022, 08.11.2022, 09.2.2023 மற்றும் 12.07.2023.

-----

ஆணை:–

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தொடக்கப்பள்ளி (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை மற்றும் உயர் தொடக்கப்பள்ளி / உயர்நிலைப் பள்ளிகளில் (6 முதல் 10 ஆம் வகுப்பு வரை) பயிலும் பயனாளிகளுக்கு பின்வருமாறு உணவூட்டு செலவினம் நிர்ணயிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது:–

| வ. எண் | பொருள் | தொடக்கப்பள்ளி (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை | | உயர் தொடக்கப்பள்ளி / உயர்நிலைப் பள்ளி (6 முதல் 10 ஆம் வகுப்பு வரை) | |
|---|---|---|---|---|---|
| | | பருப்பு பயன்படுத்தும் நாட்கள் | பருப்பு பயன்படுத்தாத நாட்கள் | பருப்பு பயன்படுத்தும் நாட்கள் | பருப்பு பயன்படுத்தாத நாட்கள் |
| 1 | காய்கறிகள் | 96 காசு | 113 காசு | 110 காசு | 127 காசு |
| 2 | தாளிதம் | 25 காசு | 50 காசு | 25 காசு | 50 காசு |
| 3 | எரிபொருள் | 54 காசு | 65 காசு | 54 காசு | 65 காசு |
| | மொத்தம் | ரூ.1.75 | ரூ.2.28 | ரூ.1.89 | ரூ.2.42 |

2. சமூக நல ஆணையர் மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மத்திய அரசானது தனது 07.10.2022 நாளிட்ட கடிதத்தில் மதிய உணவு திட்டத்தின்கீழ் (PM-POSHAN) சமையலுக்கான செலவினம் (Cooking Cost) என்பதை பொருட்களுக்கான செலவினம் (Material Cost) என மாற்றி இவ்வினத்திற்கான தொகையினை 01.10.2022 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தி நிர்ணயம் செய்துள்ளது என்று தெரிவித்துள்ளார்:-

| நிலை | ஏற்கனவே சமையலுக்கான செலவினத்திற்காக வழங்கப்பட்ட தொகை (01.10.2022க்கு முன்னர்) | | | தற்போது 01.10.2022 அன்று முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கான செலவினத் தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்பட வேண்டிய உணவூட்டு செலவினத் தொகை | மத்திய அரசு பங்கு (60%) | மாநில அரசு பங்கு (40%) | ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்பட வேண்டிய பொருட்களுக்கான செலவினத் தொகை | மத்திய அரசு பங்கு (60%) | மாநில அரசு பங்கு (40%) |
| தொடக்கப் பள்ளி | ரூ.4.97 | ரூ 2.98 | ரூ 1.99 | ரூ 5.45 | ரூ 3.27 | ரூ 2.18 |
| உயர் தொடக்கப் பள்ளி | ரூ 7.45 | ரூ 4.47 | ரூ 2.98 | ரூ 8.17 | ரூ 4.90 | ரூ 3.27 |

3. மேலும், மத்திய அரசு, மதிய உணவு திட்டத்தின்கீழ் (PM-POSHAN) 2022-2023ஆம் நிதியாண்டில் 60:40 நிதி பங்களிப்பின்கீழ் முதல் தவணை, இரண்டாவது தவணை மற்றும் 2021-2022ம் நிதியாண்டின் உறுதியான பொறுப்புகளின் கீழ் (Committed Liabilities) மத்திய அரசின் பங்காக ரூ.47700.10/- இலட்சமும், மாநில அரசு பங்கு ரூ.28117.56/-இலட்சமும் ஆக மொத்தம் ரூ.75817.66/- இலட்சமும் விடுவிக்கப்பட்டு ஒற்றை தலைமை முகமை (Single Nodal Agency) கணக்குத் தலைப்பின்கீழ் மாற்றப்பட்டுள்ளது என்றும் சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. சமூக நல ஆணையர் மேலும் தெரிவிக்கையில், மத்திய அரசினால் 01-10-2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்ட பொருட்களுக்கான செலவினத்தின் (Material cost) அடிப்படையில் உணவுப் பொருட்கள் மற்றும் அவற்றின் அளவு ஆகியவற்றை மாற்றினால் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கலவை சாத உணவு வகைகளை (Variety Menu) முற்றிலும் மாற்ற வேண்டிய நிலை எழக்கூடும் என்பதாலும் இது குறித்து பரிசீலனை மேற்கொண்டு செயல்படுத்துவதிலும் கால தாமதம் ஏற்படும் என்பதாலும் தற்போது மத்திய அரசினால் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கான செலவினத்தை (Material Cost) கருத்தில் கொண்டு தற்போது பின்பற்றப்படும் நடைமுறைகளில் மத்திய அரசு நிர்ணயித்துள்ளவாறு செலவினத் தொகை ரூ. 5.45 / ரூ.8.17ஐ ஈடு செய்யும் வகையில் அரசு/ அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பயனடையும் பயனாளிகளுக்கு உணவுப் பொருட்களுக்கான செலவினத்தை (Material Cost) கீழ்க்கண்டவாறு உயர்த்தி

வழங்கலாம் என்று தெரிவித்துள்ளார்:-

தொடக்கப்பள்ளி பயனாளிகள் (1 முதல் 5-ஆம் வகுப்பு வரை)

| வ. எண் | உணவுப் பொருள் | தற்பொழுது உள்ள விலை விகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | அரிசி | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது |
| 2 | பருப்பு (15 கி), எண்ணெய் (3 கி), கருப்பு கொண்டைக்கடலை/ பச்சைப் பயிறு (20 கி) (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ.1.41 | ரூ.1.41 |
| 3 | உப்பு மற்றும் தாளிதப்பொருட்கள் காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) (ரூ.1.05+ரூ.0.08) / (ரூ.1.33 + ரூ.0.08) (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.1.51 | ரூ.1.79 |
| 4 | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.0.60 | ரூ.1.25 |
| 5 | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | - | ரூ.1.00 |
| | மொத்தம் | ரூ. 3.52 | ரூ.5.45 |

உயர் தொடக்கப்பள்ளி பயனாளிகள் / உயர் நிலைப்பள்ளி பயனாளிகள் (6 முதல் 10-ஆம் வகுப்பு வரை)

| வ. எண் | உணவுப் பொருள் | தற்பொழுது உள்ள விலை விகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | அரிசி | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது |
| 2 | பருப்பு (15 கி), எண்ணெய் (3 கி), கருப்பு கொண்டைக்கடலை/ பச்சைப் பயிறு (20 கி) (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ.1.41 | ரூ.1.41 |

| | | | |
|---|---|---|---|
| 3 | உப்பு மற்றும் தாளிதப் பொருட்கள், காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) (ரூ.1.19+ரூ.0.08)/ (ரூ.1.65+ரூ.0.08) (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.1.65 | ரூ.2.11 |
| 4 | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.0.60 | ரூ.1.25 |
| 5 | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | – | ரூ.3.40 |
| | மொத்தம் | ரூ.3.66 | ரூ.8.17 |

5. சமூக நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அரசு/ அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பயனடையும் பயனாளிகளுக்கு உணவுப் பொருட்களுக்கான செலவினத்தை பின்வருமாறு உயர்த்தி வழங்கி ஆணையிடுகிறது:–

<u>தொடக்கப்பள்ளி பயனாளிகள் (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை)</u>

| வ. எண் | உணவுப் பொருள் | தற்பொழுது உள்ள விலை விகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | அரிசி | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது |
| 2 | பருப்பு (15 கி), எண்ணெய் (3 கி), கருப்பு கொண்டைக்கடலை/ பச்சைப் பயிறு (20 கி) (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ.1.41 | ரூ.1.41 |
| 3 | உப்பு மற்றும் தாளிதப்பொருட்கள் (ரூ.0.38) காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) (ரூ.1.05+ரூ.0.08) / (ரூ.1.33 + ரூ.0.08) (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.1.51 | ரூ.1.79 |
| 4 | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.0.60 | ரூ.1.25 |
| 5 | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | – | ரூ.1.00 |
| | மொத்தம் | ரூ.3.52 | ரூ.5.45 |

உயர் தொடக்கப்பள்ளி பயனாளிகள் / உயர் நிலைப்பள்ளி பயனாளிகள் (6 முதல் 10–ஆம் வகுப்பு வரை)

| வ. எண் | உணவுப் பொருள் | தற்பொழுது உள்ள விலை விகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | அரிசி | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது | மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது |
| 2 | பருப்பு (15 கி), எண்ணெய் (3 கி), கருப்பு கொண்டைக் கடலை/ பச்சைப் பயிறு (20 கி) (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ.1.41 | ரூ.1.41 |
| 3 | உப்பு மற்றும் தாளிதப் பொருட்கள் (ரூ.0.38), காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) (ரூ.1.19+ரூ.0.08)/ (ரூ.1.65+ரூ.0.08) (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.1.65 | ரூ.2.11 |
| 4 | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.0.60 | ரூ.1.25 |
| 5 | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | – | ரூ.3.40 |
| | மொத்தம் | ரூ.3.66 | ரூ.8.17 |

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.e-file No.218/நிதித் (ச.ந.)துறை/2023 நாள் 22.11.2023இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுன்சோங்கம் ஜடக் சிரு
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை–5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,சென்னை–3.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6.

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II),
சென்னை–18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.7) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்